Title of PDF Document

This is the subtitle of PDF, Use long text here.

சென்னை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள், சென்னை . 08.

ந.க.எண். 005217/அ3/2024, நாள். 16..07.2024.

பொருள் பள்ளிக் கல்வி – டாக்டர் இராதாகிருஷ்ணன் பிறந்த நாளான 05.09.2024 அன்று ஆசிரியர் தின விழா கொண்டாடுதல் – சிறந்த ஆசிரியர்களை தேர்ந்தெடுக்க ஏதுவாக EMIS இணைய தளம் மூலம் ஆசிரியர்களின் விவரங்கள் பதிவேற்றம் செய்திட மென்பொருள் உருவாக்குதல் – மாநில நல்லாசிரியர் விருதுக்கு விண்ணப்பிக்கும் ஆசிரியர்கள் தங்கள் விவரங்களை EMIS இணைய தளம் மூலம் பதிவேற்றம் செய்ய தெரிவித்தல் – சார்பாக.

பார்வை 1 அரசாணை (1டி) எண். 220, பள்ளிக் கல்வி (பொது–II) துறை, நாள். 05.08.2022

2 சென்னை – 06, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் கடிதம் ந.க.எண். 040011/ஐ/இ1/2024, நாள். 12.07.2024

........................

மேற்காண் பொருள் சார்ந்து பார்வை 2 – ல் காணும் கடிதத்தில் தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறையின் கீழ் இயங்கும் தொடக்க/நடுநிலை/உயர்நிலை/மேல்நிலை/தனியார் பள்ளிகள/ஆங்கிலோ இந்தியப் பள்ளிகள்/சமூக பாதுகாப்புத்துறை/ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத்துறை மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் கீழ் இயங்கும் பள்ளிகளில் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் மாதம் 5 – ம் தேதி முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் இராதாகிருஷ்ணன் பிறந்த நாளினை ஆசிரியர் தின விழாவாக கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்விழாவில் சிறந்த ஆசிரியர்களுக்கு மாநில அரசு விருதான டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது வழங்கி சிறப்பிக்கப்பட்டு வருகிறது. விருது பெறும் ஆசிரியர்களுக்கு ஆசிரியர் தின விழாவில் ரூ.10,000/–( ரூபாய் பத்தாயிரம் மட்டும்) ரொக்கப்பரிசும், ரூ.2,500/– மதிப்பிலான வெள்ளிப் பதக்கமும், பாராட்டுச் சான்றிதழ் மற்றும் பயணப்படியும் வழங்கப்பட்டு வருகிறது.

எனவே, டாக்டர் இராதாகிருஷ்ணன் விருதுக்கு தகுதியான ஆசிரியர்கள் அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி மாதிரி விண்ணப்பப் படிவத்தினை அடிப்படையாக கொண்டு EMIS இணைய தளம் மூலம் ஆசிரியர்களின் விவரங்கள் பதிவேற்றம் செய்திட புதிய மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது. பதிவேற்றம் செய்யப்பட வேண்டியவிவரங்கள் இத்துடன் இணைப்பாக வழங்கப்பட்டுள்ளது.

எனவே, சென்னை மாவட்டத்தில் உள்ள தொடக்க/நடுநிலை/உயர்நிலை/மேல்நிலை/தனியார் பள்ளிகள்/ஆங்கிலோ இந்தியப் பள்ளிகள்/சமூக பாதுகாப்புத்துறை/ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத்துறை மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் கீழ் இயங்கும் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்கள் மாநில நல்லாசிரியர் விருதுக்கு விண்ணப்பிக்கும் ஆசிரியர்கள் தங்களின் விவரங்களை EMIS இணைய தளம் மூலம் 16.07.2024 முதல் 24.07.2024 க்குள் பதிவேற்றம் செய்திட அறிவுறுத்துமாறு அனைத்துப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் / முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு
மாதிரி விண்ணப்ப படிவம் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள்

முதன்மைக் கல்வி அலுவலர்
சென்னை – 08.

பெறுநர்
அனைத்து வகைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள்
சென்னை மாவட்டம்.

நகல்

1. கல்வி அலுவலர் ( சென்னை பெருநகர மாநகராட்சி பள்ளிகள்) ரிப்பன் மாளிகை, சென்னை – 03.

2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள், சென்னை மாவட்டம். (மாவட்டக் கல்வி அலுவலர்கள் தங்கள் ஆளுகையின் கீழுள்ள பள்ளிகளுக்கு சுற்றறிக்கை மூலம் தெரிவித்து ஆசிரியர்கள் உரிய தேதிக்குள் விண்ணப்பிக்க தகவல் தெரிவித்திடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்)